செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் 22.08.2016

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; யூலை 2016

### தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

### தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமரா. சத்தரசிங்ஹ அவர்கள், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின்மீது வருடம் பணவீக்கம் 2016 யூன் மாதத்தில் 6.4% ஆக இருந்து 2016 யூலை மாதத்தில் 5.8% ஆக குறைவடைந்துள்ளதெனத் தெரிவித்தார். 2016 யூலை மாதத்திற்கான உணவுப் பொருட்களின் மற்றும் உணவு அல்லாத பொருட்களின் பணவீக்க பங்களிப்பு முறையே 3.0% மற்றும் 2.8% உள்ளன.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2016 யூலையிற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2016 யூலையிற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 115.2 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (யூன்) சுட்டெண்ணான 116.1 உடன் ஒப்பிடுகையில் 0.9 சுட்டெண் புள்ளி மற்றும் 0.8 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.7% இனாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.1% இனாலும் குறைவடைந்ததினால் ஏற்பட்டதாகும்.

யூன் 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 யூலையிற்கான உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 0.7% குறைவடைந்துள்ளதை காட்டுகிறது. கடந்த மாதம் (யூன்) உடன் ஒப்பிடும்போது மரக்கறி, தேங்காய், உடன் மீன், சீனி, தேசிக்காய், நெத்தலி (காய்ந்தது) , சின்ன வெங்காயம், மைசூர் பருப்பு, அரிசி, வெள்ளைப் பூண்டு மற்றும் கோதுமை மா என்பவற்றின் விலைகள் குறைவடைந்தமையே உணவுப் பொருட்களின் பெறுமதி குறைவடைந்ததிற்குக் காரணமாகும். எனினும் முட்டை, வாழைப்பழம், பச்சை மிளகாய், கோழியிறைச்சி, மாம்பழம், பப்பாசிப்பழம், மிளகாய் தூள், உருளைக்கிழங்கு, அன்னாசி மற்றும் கடலை என்பவற்றின் விலைகளில் தற்போது விலை அதிகரிப்பு காணப்படுகிறது.

யூன் 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 யூலையிற்கான உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 0.1% குறைடைந்துள்ளதைக் காட்டுகிறது. இது பிரதானமாக உணவல்லாப் பொருட்களின் பிரிவில் 'தொடர்பாடல்' 'சுகாதாரம்', 'வீட்டு வசதி, நீர், மின்சாரம், எரி வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்' என்பவற்றில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி குறைவடைந்தமையினாலாகும். மேலும் 'கேளிக்கை மற்றும் கலாச்சாரம் மற்றும் 'உடையும் காலணியும்' பிரிவுகளின் பெறுமதியில் கடந்த மாதத்துடன் (யூன்) ஒப்பிடுகையில் மிகச் சிறிதளவு குறைவடைதல் காணப்படுகிறது. 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்', 'போக்குவரத்து', 'மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து', 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தனப் பராமரிப்பு' 'உணவு விடுதியும் ஹோட்டல்களும்', என்பவற்றின் உணவல்லாப் பிரிவின் செலவினப் பெறுமதியில் கடந்த மாதத்துடன் (யூன்) ஒப்பிடுகையில் அதிகரிப்பு காணப்படுகிறது. 'கல்வி' பிரிவின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை. 'தொடர்பாடல்' 'சுகாதாரம்', 'வீட்டு வசதி, நீர், மின்சாரம், எரி வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்' என்பவற்றில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி குறைவடைந்தது சமீபத்தில் அறிமுகப்படுத்திய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அகற்றுதல் காரணமாக இருந்திருக்கின்றது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின்மீது வருடம் பணவீக்கம்% |
|---|---|---|---|---|
| **2015** | யூலை | 108.9 | -0.2 | 1.8 |
| | ஓகஸ்ட் | 108.4 | -0.5 | 1.9 |
| | செப்ரெம்பர் | 108.4 | 0.0 | 1.9 |
| | ஒக்ரோபர் | 109.2 | 0.7 | 3.0 |
| | நவம்பர் | 112.0 | 2.6 | 4.8 |
| | டிசம்பர் | 113.2 | 1.1 | 4.2 |
| **2016** | ஜனவரி | 112.0 | -1.1 | -0.7 |
| | பெப்ரவரி | 110.8 | -1.1 | 1.7 |
| | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்
தொ. இல.: 011-2147001 / 011-2147020